**மாவட்ட நீதிமன்றம், திருப்பத்தூர்**
**திருப்பத்தூர் மாவட்டம்.**

**முன்னிலை :– திரு.M.செல்வம், எம்.எல்.,**
மாவட்ட நீதிபதி, திருப்பத்தூர்.

திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம், ஆடி 28 ஆம் நாள்
2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 24 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைக்கால மனு எண்.04/2026**
**இன்**
**அசல் வழக்கு எண். 14/2012**

P.M.N. மோகன கிருஷ்ணா ..... மனுதாரர்/5ம் பிரதிவாதி

/எதிராக/

1. K.சங்கர்
2. K.ரமேஷ்
3. K.சேகர் ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
4. K.பானுமதி
5. P.M.M.நந்தகோபால் (இறந்துவிட்டார்)
6. சரவண சுந்தர் (இறந்துவிட்டார்)
7. விஜயலட்சுமி
8. P.N.சங்கர்
9. N.S.அருணா
10. இளவர்.N.S.அரவிந்த் ரோஷன்
    இளவருக்காக அவரின் பாதுகாவலர்
    தாயார் 9ம் எதிர்மனுதாரர்

... எதிர்மனுதாரர்கள்/
பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 13.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர் தரப்பில் மனுதாரருக்காக அவரே ஆஜராகியும், 1 முதல் 3

எதிர்மனுதாரர்களுக்காக வழக்கறிஞர் திரு.எஸ்.எஸ்.மணியன் அவர்களும் முன்னிலையாகி, அசல் வழக்கில் 7, 8 எதிர்மனுதாரர்களுக்காக வழக்கறிஞர் திரு.பி.ராதாகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 4, 9 மற்றும் 10 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரின்மையால் அவர்கள் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இதுநாள் வரையில் என் பரிசீலனையிலிருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்திரவு**

இம்மனுவானது அசல் வழக்கு எண்.14/2012 வழக்கு நிலைக்கத்தக்கதா என்ற எழுவினாவை முதல்நிலை எழுவினாவாக தீர்வு காண கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 14, விதி 2 மற்றும் பிரிவு 151இன் படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரரின் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்:—**

(2—1) மனுதாரர் அ.வ.எண்.14/2012 வழக்கின் 5ம் பிரதிவாதி மற்றும் அ.வ.எண்.6/2012 வழக்கின் 5ம் வாதி ஆவார். அ.வ.எண்.14/2012 வழக்கானது நிலைக்கத்தக்கதா என்பதை முதல்நிலை பிரச்சினையாக எடுத்து முடிவு செய்ய கோரி இவ்விடைக்கால மனுவை தாக்கல் செய்துள்ளார். தரப்பினர்களிடையே உரிமை மற்றும் சுவாதீனம் தொடர்பாக

சர்ச்சைகள் நிலவிய போதிலும், உரிமைப் பிரகடனம் கோராமல் வெறும் தடை உத்தரவு மட்டுமே கோரி அ.வ.எண்.14/2012 வழக்கானது தொடரப்பட்டுள்ளது.

(2–2) மேலும், 22.01.2002 தேதியிட்ட உயிலை எழுதி கொடுத்த பின்னர் அவரே மற்றொரு உயிலை 09.07.2007 தேதியில் அவரது ஒரே மகளும், அ.வ.எண்.06/2012–ன் முதல் வாதிக்கு தாவா சொத்தை எழுதிக் கொடுத்துள்ளார். இது குறித்து அ.வ.எண்.14/2012–ன் வாதிகள் நன்கு அறிந்திருந்தும், வேண்டுமென்றே மறைத்துவிட்டு, முந்தைய 22.01.2002 தேதியிட்ட உயிலின் அடிப்படையில் மட்டுமே வழக்கை தாக்கல் செய்துள்ளனர். மேலும், ஒரே சொத்திற்காக ஒரே நபரால் நிறைவேற்றப்பட்ட இரண்டு பதிவு செய்யப்பட்ட உயில்கள் இருப்பதால், உரிமை தொடர்பாக உண்மையான, தீவிரமான மற்றும் சிக்கலான சர்ச்சை எழுந்துள்ள நிலையில், அத்தகைய சர்ச்சையை வெறும் தடை உத்தரவு கோரும் வழக்கில் தீர்மானிக்க இயலாது. 09.07.2007 தேதியிட்ட பிந்தைய பதிவு செய்யப்பட்ட உயில், இந்திய வாரிசுரிமைச் சட்டம், 1925–ன் பிரிவு 62–ன் கீழ், 22.02.2001 தேதியிட்ட முந்தைய உயிலை சட்டப்பூர்வமாக ரத்து செய்கின்றது. ஆகவே, சட்டப்பூர்வமாக ரத்து செய்யப்பட்ட உயிலின் அடிப்படையில் தொடரப்பட்ட அ.வ.எண்.14/2012இல் உரிமைப் பிரகடனம் கோராமல் தொடரப்பட்டிருப்பதால், அது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மேலும், அ.வ.எண்.06/2012

வழக்கில் வாதி தரப்பு சாட்சியங்கள் முழுமையாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், ஒரே சொத்திற்காக ஒரே நபரால் நிறைவேற்றப்பட்ட இரண்டு பதிவு செய்யப்பட்ட உயில்கள் இருப்பது அதன்மூலம் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு இந்நீதிமன்றமானது அ.வ.எண்.14/2012 நிலைக்கத்தக்கதா என்பதை முதல்நிலை பிரச்சினையாக தீர்மானிக்க வேண்டுமென மனுதாரர் கோருகின்றார். மேலும், பிரதிவாதிகளால் கூட்டு விசாரணைக்காக தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணையானது அனுமதிக்கப்பட்டு, அதன்படி அ.வ.எண்.06/2012 மற்றும் அ.வ.எண்.14/2012 வழக்குகள் கூட்டாக விசாரிக்கப்பட்டு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் அ.வ.எண்.06/2012 வழக்கில் பதிவு செய்யப்பட்டு வருகின்றது.

(2-3) மேலும், அ.வ.எண்.06/2012 வழக்கானது, 09.07.2007 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயிலின் அடிப்படையில், வழக்கு அட்டவணைச் சொத்திற்கான உரிமை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை கோரி தொடரப்பட்டுள்ளதால், உரிமை தொடர்பான பிரச்சனைக்கு தீர்வு காண அ.வ.எண்.14/2012-ன் வாதிகளுக்கு முழு உரிமை உள்ளது.

(2-4) மனுதாரரின் கூற்றுப்படி, சொத்துரிமை தொடர்பாக கடுமையான சர்ச்சை மற்றும் உரிமை தன்மையில் சந்தேகம் நிலவும்போது உரிமைப் பிரகடனம் கோராமல் வெறும் உறுத்துக் கட்டளை கோரி தொடரப்பட்ட வழக்கு சட்டப்படி

நிலைக்கத்தக்கதல்ல. இத்தகைய சூழ்நிலைகளில், உரிமைப் பிரகடனத்துடன் அதனைத் தொடர்ந்து தேவையான நிவாரணங்களையும் கோர வேண்டும் என்பது **Anathula Sudhakar v. P. Buchi Reddy** மற்றும் **Jharkhand State Housing Board v. Didar Singh and another, (2019) 17 SCC 692** ஆகிய வழக்குகளில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் வகுத்துள்ள சட்டநிலையாகும்.

எனவே, அ.வ.எண்.14/2012 வழக்கில் பகுதி விசாரணை முடிவடைந்துள்ள நிலையில், அடுத்தகட்ட விசாரணைக்கு முன்பாகவே அதன் நிலைக்கத்தக்கத் தன்மை குறித்து முதலில் தீர்மானிக்க வேண்டியது அவசியமென மனுதாரர் கோருகின்றார். மேலும், ஒரே சொத்திற்காக ஒரே நபரால் இருவேறு உயில்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதை இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டுள்ளதால், அ.வ.எண்.14/2012 வழக்கானது நிலைக்கத்தக்கதா என்பது குறித்து, அ.வ.எண்.06/2012–ன் விசாரணையையோ அல்லது அதில் உள்ள தரப்பினரின் உரிமைகளையோ பாதிக்காமல் தனியாகவே தீர்மானிக்க வேண்டும். அதற்கு ஆதரவாக **Saleem Bhai v. State of Maharashtra, (2003) 1 SCC 557** என்ற மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு உள்ளது.

உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908–ன் உத்தரவு VII விதி 11–இன் கீழ் மனுவை நிராகரிக்கும் நிலை கடந்திருந்தாலும், சட்டத்தால் தடைசெய்யப்பட்ட வழக்கை தொடர அனுமதிக்க

முடியாது என்பதால், இந்த சட்டப் பிரச்சினையை முதல்நிலை பிரச்சினையாக தீர்மானிக்க இந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்பதால் மனுதாரர் கோரியவாறு இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**<u>3) 2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 1 மற்றும் 3 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–</u>**

மனுதாரரின் மனு சட்டப்படியும், சங்கதிகளின் படியும் செல்லத்தக்கதல்ல. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் அ.வ.எண்.14/2012 வழக்கினை ஒரு பானுமதி என்பவர் மீது உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்தனர். கே.பானுமதி என்பவர், இந்த எதிர்மனுதாரர்கள் மீது அ.வ.எண்.6/2012 என்ற வழக்கினை உரிமை விளம்பல் மற்றும் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது. இரண்டு வழக்குகளும் ஒன்றாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உத்திரவிடப்பட்டு, அதன்படியே ஒன்றாக விசாரணை செய்யப்பட்டு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் அ.வ.எண்.6/2012 வழக்கில் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி இருவழக்குகளிலும் தனித்தனியாக எழுவினாக்கள் வனையப்பட்டு பின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு. பகுதியாக விசாரணை முடிக்கப்பட்டு, தற்போது இம்மனுவின் 2ம் எதிர்மனுதாரர் முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு

விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. தற்போது இவ்வழக்கு வாய்மொழி சாட்சியத்திற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், அசல் வழக்கானது உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி உரிமை விளம்பல் பரிகாரம் கோரத காரணத்தினால் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்ற எழுவினாவை குறித்து தற்போது விசாரணை செய்து அ.வ.எண்.14/2012 வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று பரிகாரம் கோரி இம்மனுவை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லாது. வழக்கு விசாரணையில் உள்ள காலத்தில் தனித்து ஒரு எழுவினாவை மட்டும் குறித்து முதலில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறுவது சட்டப்படி முறையற்றது, நிலைக்காது, தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

மனுதாரரான 5ம் பிரதிவாதிக்கு வழக்கினை நடத்தக்கூடாது என்ற எண்ணமும், வழக்கினை காலம் கடத்த வேண்டுமென்ற நோக்குடனும், கெட்ட எண்ணத்துடனும் இம்மனுவை முன்னிட்டுள்ளார். எனவே, மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4) மனுதாரர் தாக்கல் செய்துள்ள பதில் உரையின் சுருக்கம்:-**

(4-1) எதிர்மனுதாரர்களின் எதிருரையானது, அ.வ.எண்.6/2012 மற்றும் அ.வ.எண்.14/2012 வழக்குகளின் தன்மை மற்றும் நோக்கத்தை தவறாகப் புரிந்துகொண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போதைய இடைக்கால மனு, அ.வ.எண்.14/2012 வழக்கின் நடத்தத்தக்கத் தன்மையை

(Maintainability) முதல்நிலை சட்டப் பிரச்சினையாக முதலில் தீர்மானிக்க கோருவதற்காக மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது அ.வ.எண்.6/2012 வழக்கின் விசாரணை, சாட்சியங்கள் அல்லது குறுக்கு விசாரணையை பாதிக்கும் நோக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. அ.வ.எண்.6/2012 மற்றும் அ.வ.எண்.14/2012 ஆகியவை கூட்டு விசாரணையில் இருந்தாலும், அவை தனித்தனி வழக்குகள் ஆகும். கூட்டு விசாரணை என்பது பொதுவான சாட்சியங்களை பதிவு செய்வதற்கும், முரண்பட்ட தீர்ப்புகளைத் தவிர்ப்பதற்குமான நடைமுறை ஏற்பாடு மட்டுமே ஆகும். அது ஒரு வழக்கின் அடிப்படை சட்டக் குறைபாட்டை நீக்கவோ அல்லது வெறும் தடையுத்தரவு வழக்கை உரிமைப் பிரகடன வழக்காக மாற்றவோ முடியாது.

(4–2) அ.வ.எண்.14/2012 வழக்கில் வாதிகள் வெறும் நிரந்தரத் தடையுத்தரவு மட்டுமே கோரியுள்ளனர். ஆனால், வழக்கு அட்டவணைச் சொத்து தொடர்பாக உரிமை குறித்து கடுமையான சர்ச்சை நிலவுவதால், வாதிகள் தங்களது உரிமையை உயில் அடிப்படையில் கோருகின்றனர். அத்தகைய உயிலின் சட்டபூர்வமான செல்லுபடித்தன்மை மற்றும் அமலாக்கத்தன்மையை நிரூபிக்கும் பொருட்டு உரிமைப் பிரகடனம் கோராமல் வெறும் தடையுத்தரவு கோருவது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மேலும், உயில் தொடர்பான உரிமை

கோரப்படும் நிலையில், இந்திய சாட்சியச் சட்டம், 1872–ன் பிரிவுகள் 68 மற்றும் 69–ன் கீழ் தேவையான நிரூபண முறைகள் பின்பற்றப்பட வேண்டும். இருவழக்குகளிலும் சாட்சியங்களின் பதிவுகள் பகுதியாக முடிவடைந்துள்ள நிலையில், வழக்கின் நிலைக்கத்தக்க தன்மை குறித்த சட்ட ஆட்சேபனையை நிராகரிக்க முடியாது என்பதால், மனுதாரரின் மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

5) இம்மனுவில், தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு அனுமதிக்கப்பட வேண்டியதா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு :–</u>**

6) மனுதாரர், அ.வ.எண்.14/2012 வழக்கில் 5ம் பிரதிவாதி ஆவார். 1 முதல் 3 எதிர்மனுதாரர்களான வாதிகள், மனுதாரரின் மீதும் மற்ற எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீதும் தாவா சொத்தில் உள்ள வாதிகளின் சுவாதீன அனுபவத்திற்கு பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ தடை சொய்யாமலிருக்கும் பொருட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அ.வ.எண்.14/2012 வழக்கானது தாக்கல் செய்யப்பட்டள்ளது.

7) தாவா சொத்து சம்பந்தமாக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கானது 27.11.2009 தேதியில் திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்து பின்னிட்டு வேலூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்திற்கு மாறுதலாகி அங்கு அ.வ.எண்.28/2011ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அதன் பின்னர் வேலூர் முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் உத்திரவுபடி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு பின் அ.வ.எண்.14/2012ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது.

8) இதே சொத்துக்கள் சம்பந்தமாக இம்மனுவின் 4ம் எதிர்மனுதாரரான பானுமதி, இம்மனுவின் 1 முதல் 3 எதிர்மனுதாரர்களான பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்த வழக்கானது அ.வ.எண்.6/2012 ஆக இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

9) மேற்படி அ.வ.எண்.14/2012 வழக்கும், அ.வ.எண்.6/2012 வழக்கும் ஒரே சொத்து சம்பந்தமாக ஒரே தரப்பினர்களிடையே தாக்கல் செய்யப்பட்டு நிலுவையிலிருந்து வரும் நிலையில், இரு வழக்குகளையும் இணைந்து விசாரிக்க உத்திரவிடப்பட்டு அதன்படி அ.வ.எண்.6/2012 வழக்கில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டு வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, பி.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வழக்கு நிலுவையில் உள்ளது.

10) அ.வ.எண்.14/2012 வழக்கின் 5ம் பிரதிவாதியான மனுதாரர், அ.வ.எண்.14/2012 வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேற்படி வழக்கினை 1 முதல் 3 எதிர்மனுதாரர்களான வாதிகள் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டும் கோரி தாக்கல்

செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் சொத்தின் உரிமையை மறுத்து உரிமை சம்பந்தமாக பிரச்சனை உள்ள நிலையில், விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டும் கோரி வாதிகள் தாக்கல் செய்துள்ள மேற்படி வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், தாவா சொத்து சம்பந்தமாக இந்த வழக்கின் வாதிகளுக்கு 22.02.2001 தேதியில் ஒரு உயில் எழுதி வைத்துள்ளதாகவும், பின்னிட்டு அந்த உயிலை எழுதிக் கொடுத்த அதே நபர் 09.07.2007 தேதியில் இம்மனுவின் 4ம் எதிரிமனுதாரரான பானுமதிக்கு வேறு ஒரு பதிவு உயில் எழுதிக் கொடுத்துள்ளதாகவும், மேற்படி உயிலின் அடிப்படையிலேயே இந்த மனுதாரரும், இவ்வழக்கின் வாதிகளும் உரிமை கோருவதாகவும், இந்நிலையில், தாவா சொத்தின் உரிமை சம்பந்தமாக மனுதாரருக்கும், வாதிகளுக்கும் பிரச்சனை உள்ள நிலையில், விளம்புகை பரிகாரம் கோராமல், உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே இந்த வழக்கு நிலைக்கத்தக்கதா, இல்லையா என்பதை பொருத்து முதலில் தீர்வு காண வேண்டுமென்று கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

11) 1 முதல் 3 எதிர்மனுதாரர்களான வாதிகளின் தரப்பில், அ.வ.எண்.6/2012 மற்றும் அ.வ.எண்.14/2012 வழக்குகள், வேலூர் முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் உத்திரவின்படி

இணைந்து விசாரிக்க உத்திரவிடப்பட்டு, வாய்மொழி சாட்சிகள் பதிவு செய்து பி.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், அசல் வழக்கு நிலைக்கத்தக்கதா என்ற எழுவினாவை முதலில் விசாரணைக்கு எடுத்து கொள்ள வேண்டுமென்று கோருவது முறையற்றது என்றும், வழக்கின் விசாரணையானது பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ள நிலையில், இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என கூறப்படுகின்றது.

12) மனுதார் இம்மனுவினை உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 14, விதி 2ன் கீழ் தாக்கல் செய்துள்ளார், அதில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> **(2) Where issues both of law and of facts arise in the same suit, and the Court is of opinion that the case or any part thereof may be disposed of on an issue of law only, it may try that issue first if that issue relates to-**
>
> **(a) the jurisdiction of the Court, or**
>
> **(b) a bar to the suit created by any law for the time being in force**.

13) அ.வ.எண்.6/2012 மற்றும் அ.வ.எண்.14/2012 ஆகிய இரண்டு வழக்குகளின் சொத்துக்களும் ஒரே சொத்துக்கள் என்பதும் இரு வழக்குகளின் வாதிகளும், பிரதிவாதிகளும் வழக்கு சொத்து சம்பந்தமாக ஒரே நபர் எழுதிக் கொடுத்த உயில்களின் அடிப்படையில் சொத்தின் உரிமை மற்றும் அனுபவம் கோருகின்ற நபர்கள் என்பதும் எனவே

இருவழக்குகளையும் இணைந்து விசாரிக்க உத்திரவிடப்பட்டு அ.வ.எண்.6/2012இல் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பதிவு செய்யப்பட்டு வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு பி.சா.1இன் குறுக்கு விசாரணைக்காக வழக்கு நிலுவையில் உள்ளது என்பதும் ஒப்புக் கொள்ளப்பட்ட அம்சங்கள் ஆகும். அ.வ.எண்.14/2012 வழக்கானது 2009ஆம் ஆண்டிலேயே திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, பின் வேலூர் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அதன் பின் இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இதுநாள் வரையில் நீண்ட காலமாக நிலுவையில் இருந்து வந்து வாதிகள் தரப்பு சாட்சியம் முடிவடைந்து, பிரதிவாதிகளின் சாட்சியத்திற்காக வழக்கு நிலுவையில் உள்ளது. அசல் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்ற எழுவினாவை முதன்மை எழுவினாவாக எடுத்துக் கொண்டு தீர்வு காண வேண்டுமென்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டு நமது மாண்புமிகு உச்ச நீதிமன்றம்

(1) (Civil ) Appeal No.6191 of 2001, Anathula Sudhakar v. P.Buchi Reddy

(2) Civil Appeal No.8242 of 2009, Jharkhand State Housing Board versus Anirudh Kumar Sahu & Ors

(3) Civil Appeal No.8241 of 2009, Jharkhand State Housing Board versus Didar Singh & Another

ஆகிய வழக்குகளில் அளிக்கப்பட்ட தீர்ப்புகள் மனுதாரர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேற்படி வழக்குகள் அனைத்துமே

விசாரணை நீதிமன்றத்தால் முழுவதுமாக விசாரித்து தீர்வு கண்டுள்ள நிலையில், மேல்முறையீட்டு வழக்குகளில் அவ்வாறு தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த வழக்கானது பிரதிவாதிகளின் சாட்சியத்திற்காக பகுதியாக விசாரிக்கப்பட்டு நிலுவையில் உள்ளது. 2009ஆம் ஆண்டில், தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில், மிகவும் காலம் கடந்து வழக்கின் விசாரணை முடிவடையும் நிலையில் ஒரு எழுவினாவை மட்டும் முதன்மையாக எடுத்துக் கொண்டு தீர்வு செய்ய வேண்டுமென கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது ஏற்புடையதல்ல என்றும், தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் முடிவு செய்து அவ்வாறே இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகின்றது.

14) முடிவில், இம்மனு தள்ளுபடி செய்யப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 24ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M SELVAM
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2026.07.24 18:49:56 +0530

**மாவட்ட நீதிபதி,**
**திருப்பத்தூர்.**

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

இல்லை.

M SELVAM
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2026.07.24 18:50:03 +0530

**மாவட்ட நீதிபதி,**
**திருப்பத்தூர்.**